**இலட்சுமி அம்மாள் நினைவுக் கோப்பை பதின்மூன்றாவது**
**அகில இந்திய ஹாக்கிப் போட்டி**

கோவில்பட்டி, ஜூன் 01, 2024

கே.ஆர்.மருத்துவம் மற்றும் கல்வி அறக்கட்டளையின் சார்பில், கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், இலட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடமியுடன் இணைந்து நடத்தும் இலட்சுமி அம்மாள் நினைவுக் கோப்பை பதின்மூன்றாவது அகில இந்திய ஹாக்கிப் போட்டிகள் மே 24ம் தேதி முதல் ஜூன் 2ம் தேதி வரை கோவில்பட்டி செயற்கை புல்வெளி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

10 நாட்கள் நடைபெறும் இப்போட்டிகளில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து 16 சிறந்த அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன. இப்போட்டிகள் கால் இறுதி ஆட்டம் வரை லீக் முறையிலும், அரை இறுதி மற்றும் இறுதி போட்டிகள் அனைத்தும் நாக் அவுட் முறையிலும் நடைபெறுகிறது.

ஒன்பதாம் நாளான 01.06.2024 சனிக்கிழமை மாலை 05.30 மணிக்கு நடைபெற்ற முதல் அரையிறுதி போட்டியில் நியூ டெல்லி, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் அணியும், போபால், நேஷனல் சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ் அணியும் மோதின.

இதில் 4:2 என்ற கோல் கணக்கில் போபால், நேஷனல் சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ் அணி வெற்றிப் பெற்று இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது.

போபால், நேஷனல் சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ் அணி வீரர் சுனித் லக்ரா (4 மற்றும் 54வது நிமிடங்கள் - பீல்டு கோல்), அமந்தீப் லக்ரா (25 மற்றும் 59வது நிமிடங்கள் - பெனால்டி கார்னர்) ஆகியோர் தலா இரு கோல்கள் போட்டனர்.

6 மற்றும் 16-வது நிமிடங்களில் நியூ டெல்லி, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் அணி வீரர்கள் அர்மான் குரேஷி (பெனால்டி கார்னர்), மற்றும் உத்தப்பா (பீல்டு கோல்) ஆகியோர் முறையே தலா ஒரு கோல் போட்டனர்.

சுரேஷ் குமார் மற்றும் பிரியாஸ் கவுடா ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரரர் விருது போபால், நேஷனல் சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ் அணி வீரர் சுனித் லக்ராவுக்கு வழங்கப்பட்டது.

(Refer Photo – LASA_2024_01062024_SEMIFINAL_1_Photo 01)

(Refer Photo – LASA_2024_01062024_ SEMIFINAL _1_Photo 02)

இரவு 07.30 மணிக்கு நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி போட்டியில் பெங்களூரு, கனரா பேங்க் அணியும் புபனேஸ்வர் நிஸ்வாஸ் அணியும் மோதின.

இதில் 2:2 என்ற கோல் கணக்கில் சமன் பெற்ற நிலையில் சூட் அவுட் முறை கடைபிடிக்கப்பட்டு

அதில் 2:1 என்ற கோல் கணக்கில் புபனேஸ்வர் நிஸ்வாஸ் அணி வெற்றிப் பெற்று இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது.

20-வது நிமிடத்தில் புபனேஸ்வர் நிஸ்வாஸ் அணி வீரர் சுதீப் மின்ஸ் பெனால்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

21-வது நிமிடத்தில் புபனேஸ்வர் நிஸ்வாஸ் அணி வீரர் மத்தியாஸ் டாங் பெனால்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

22 மற்றும் 48-வது நிமிடங்களில் பெங்களூரு, கனரா பேங்க் அணி வீரர் நிக்கின் திம்மையா பீல்டு கோல் முறையில் இரு கோல்கள் போட்டார்.

சுரேஷ் குமார் மற்றும் அஸ்வனி குமார் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரரர் விருது புபனேஸ்வர் நிஸ்வாஸ் அணி வீரர் திலீப் கு சா-வுக்கு வழங்கப்பட்டது.

(Refer Photo – LASA_2024_01062024_SEMIFINAL_2_Photo 01)

(Refer Photo – LASA_2024_01062024_ SEMIFINAL_2_Photo 02)

(Refer Photo – LASA_2024_01062024_ SEMIFINAL_2_Photo 03)

**02.06.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும் போட்டிகளின் விவரம்:**

மாலை 05.00 மணிக்கு நடைபெறும் மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களுக்கான போட்டியில் நியூ டெல்லி இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் அணியும் பெங்களூரு, கனரா பேங்க் அணியும் மோதுகின்றன

இரவு 07.00 மணிக்கு நடைபெறும் இறுதி போட்டியில் போபால், நேஷனல் சென்டர் ஆஃப் எக்ஸலன்ஸ் அணியும் புபனேஸ்வர் நிஸ்வாஸ் அணியும் மோதுகின்றன

**பரிசளிப்பு:**

**02.06.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று முதலிடம் பெறும் அணிக்கு ரூபாய் 1,00,000-மும், இரண்டாவது இடம் பெறும் அணிக்கு ரூபாய் 75,000-மும், மூன்றாவது இடம் பெறும் அணிக்கு ரூபாய் 50,000-மும், நான்காவது இடம் பெறும் அணிக்கு ரூபாய் 30,000மும் இலட்சுமி அம்மாள் நினைவு சுழற்கோப்பையுடன் வழங்கப்பட உள்ளது. மேலும் கால் இறுதி சுற்றுக்கு தகுதி பெற்ற நான்கு அணிகளுக்கு ஆறுதல் பரிசாக தலா ரூபாய் 20,000 வீதம் வழங்கப்படுகிறது.**

**மேலும், நடுவர்களால் தேர்வு செய்யப்படும் சிறந்த கோல் கீப்பர், சிறந்த பின்கள ஆட்டக்காரர், சிறந்த நடுகள ஆட்டக்காரர், சிறந்த முன்கள ஆட்டக்காரர், சிறந்த வளர்ந்து வரும் வீரர், தொடர் நாயகன் விருதுகள் தனி நபர்களுக்கு வழங்கப்படுகிறது**